தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1979 மார்ச் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

வே

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதி.

குறுகிய கால வினா எண். 26.—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொது கூட்டங்கள் நடத்த மின்துறையின் அனுமதி பெற வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) அதை மாற்ற அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இப்போது சில அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்த வேண்டுமென்றால், அவர்கள் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு கட்டணம் வசூலிப்பதற்காக, மின்சாரத் துறையிடமிருந்து அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக இங்கே பல தடவை பேசப்பட்டது. சில இடங்களில் அனுமதி வாங்கப்படுகிறது. சில இடங்களில் அனுமதி

வாங்கப் படுவதில்லை. இந்த முறையை அடியோடு ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவது, மின் விபத்து நிகழ்வது ஆகியவற்றைத் தடுக்கவும், பொதுக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு அருகிலுள்ள வீடுகள் அல்லது கடைகளிலோ அல்லது மின் வாரியத்திடமிருந்தோ இத்தகைய மின்சாரம் வாங்குவது குறித்து அரசு 1978 டிசம்பர் திங்களில் உத்தரவிட்டிருந்தது. ஆனால், 3–1–79 அன்று நடைபெற்ற மின்வாரிய ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்த முறையில் பல நடைமுறை சிரமங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆகவே, இப்போது வேறொரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, கூட்டங்கள் நடைபெறுகின்ற இடத்திற்கு அருகிலுள்ள கடைகள் அல்லது வீடுகளில் இருந்து மின் வசதியைப் பெற்றுக் கொள்ளலாம். அப்படி பெற்றுக் கொள்வதற்கு ரூ. 5 கட்டணம் செலுத்த வேண்டும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டங்கள் நடைபெறு வதற்கு மின்சார வாரியத்தின் அனுமதி பெறவேண்டுமென்பது மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். என்னுடைய தொகுதியில் நாளை பொதுக் கூட்டம் நடைபெற இருக்கிறது. அந்தக் கூட்டத்திற்கு அனுமதி கேட்கின்ற நேரத்திலே, போலீஸ் அதிகாரிகள் ஒரு உத்தரவு நெம்பரைக் காட்டி, அந்தக் கூட்டத் திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக் கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் சொல்வது சரியா அல்லது போலீஸ் உத்தரவு சரியா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, அரசு உத்தரவு 21–3–79 அன்றுதான் பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இன்னும்கீழ் மட்டத்தில் அது சென் றிருக்காது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, முந்தா நாள் திருவொற்றியூரில் நடைபெற்ற கூட்டத்திற்கு இந்த மாதிரி எலக்டிரிக்சிடி டிபார்டுமென்டிலே பணம் கட்டுவதற்குச் சென்ற போது, பழைய உத்தரவை காட்டியதால், அந்தக் கூட்டம் அனுமதி இல்லாமலேயே நடத்தப்பட்டது. எனவே, இனிமேல் இப்படி கூட்டம் நடத்துவதானால், இந்த இரண்டையும் இணைக்காமல், போலீஸ் லைசன்சுக்கும், மைக்குக்கும் இணைப்பு இல்லாமல் ஒரு உத்தரவைப் போடுவார்களா ?

1979 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது இடப்பட்டுள்ள உத்தரவின் அடிப்படையில், இந்த இரண்டும் இணைக்கப்படவில்லை. தனித் தனியாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சட்டத்தை மீறக் கூடாது.

சாத்தனூர் அணை ஆயக்கட்டு பகுதியில் வரி வசூல்.

குறுகிய கால வினா எண். 27—திரு. கோ. ரகோத்தமன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம், சாத்தனூர் அணை ஆயக்கட்டில் உள்ள 11 கிராமங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் சனவரி மாதத்திலேயே அதற்கான நில வரியையும் வசூலிப்பதால் மேற்படி கிராமபொது மக்கள் வரி கட்டமுடியாமல் அவதிக்குள்ளாகின்றார்கள் என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் ஏப்ரலில் வரி வசூல் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத்தைச் சேர்ந்த 11 கிராமங்கள் சாத்தனூர் அணைக் கட்டிலிருந்து விடப்படும் தண்ணீரினால் பயன் அடைகின்றன. வருவாய் வாரிய நிலை ஆணையின்படி, தென்னாற்காடு மாவட்டத்தின் வரி வசூல் காலம் சனவரியிலிருந்து ஏப்ரல் வரையாகும். சம்பந்தப்பட்ட கிராம விவசாயிகள் இந்த வரி வசூல் காலத்தை ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கு மாற்றும்படி கோரியுள்ளனர். அவர்களது கோரிக்கையை மாவட்ட ஆட்சியர் ஆய்ந்து வருகிறார். வருவாய் வாரியத்தின் மூலம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பரிந்துரை வந்ததும் அரசு தக்க ஆணை பிறப்பிக்கும். தற்போது இந்த கிராமங்களில் வரி வசூலில் கெடுபிடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் பகுதியிலே இந்தத் தண்ணீர் பயன்படுத்தி அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் விரைவிலே அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. விரைவிலே என்றால், எவ்வளவு காலத்தில் என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?